©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 13A] சென்னை, திங்கட்கிழமை, ஜனவரி 23, 2017
தை 10, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2017–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2017.**

**தமிழ்நாடு மாநிலத்தின் பண்பாடு, பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கும், சொந்த மண்ணின் காளைகள் உயிர் வாழ்வதையும், அவை தொடர்ந்து நன்றாக இருப்பதை உறுதி செய்வதையும் நிச்சயிக்கும் பொருட்டு, 1960–ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்தி ஏழாம் ஆண்டில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்த சட்டம் 2017–ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது 2017ஆம் ஆண்டு, சனவரி 21ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து விட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மையச்சட்டம் 59/1960.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் என்று சுட்டப்படுவதான) 1960–ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில் (d) எனும் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“(dd) “ஜல்லிக்கட்டு” என்பது இது தொடர்பாக மாநில அரசால் அறிவிப்பு செய்யப்படலாகிறவாறான அத்தகைய இடங்களில், சனவரி முதல் மே மாதங்களில் அத்தகைய நாட்களன்று பாரம்பரியம் மற்றும் பண்பாட்டினை பின்பற்றும் நோக்கத்துடன் காளைகளை ஈடுபடுத்தி நடத்தப்படும் ஒரு நிகழ்வாகும் என்று பொருள்படும்; மற்றும் இதில் “மஞ்சுவிரட்டு”, “வடமாடு” “எருது விடும் விழா” ஆகியவை உள்ளடங்குவதாக இருக்கும்’’.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 3–ஆம் பிரிவு, அந்தப் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்டவாறான (1)–ஆம் உட்பிரிவுக்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(2) (1)–ஆம் உட்பிரிவில் அடங்கியிருப்பது எது எவ்வாறாயிருப்பினும், மாநில அரசால் இயற்றப்படலாகிறவாறான அத்தகைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்படும் "ஜல்லிக்கட்டு" அனுமதிக்கப்படுதல் வேண்டும்".

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 11–ஆம் பிரிவின், (3)–ஆம் உட்பிரிவில் (e) எனும் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(f) பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பின்பற்றி மற்றும் முன்னேற்றும் நோக்கத்துடன் மற்றும் சொந்த மண்ணின் காளைகள் உயிர் வாழ்வதையும், அவை தொடர்ந்து நன்றாக இருப்பதையும் உறுதி செய்யும் நோக்கத்துடன் ஜல்லிக்கட்டு நடத்தப்படுதல் வேண்டும்".

22–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** பின்வரும் வரம்புரை முதன்மைச் சட்டத்தின் 22–ஆம் பிரிவுடன் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**வரம்புரை:** ஆனால் இந்தப் பிரிவில் அடங்கியிருப்பது 'ஜல்லிக்கட்டு' நடத்துவதற்குப் பொருந்தாது.

27–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 27–ஆம் பிரிவில் (b) எனும் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(c) சொந்த மண்ணின் காளைகள் உயிர் வாழ்வு மற்றும் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு மற்றும் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டை பின்பற்றி மற்றும் முன்னேற்றும் நோக்கத்துடன் "ஜல்லிக்கட்டு" நடத்தப்படுதல்''.

28-A எனும் புதிய பிரிவு புகுத்தப்படுதல்.

**7.** முதன்மைச் சட்டத்தின் 28–ஆம் பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:-

28–A "ஜல்லிக்கட்டு" தொடர்பான காப்பு – இந்தச் சட்டத்தில் அடங்கியிருப்பது எதுவும் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பின்பற்றி மற்றும் அதனை முன்னேற்றுவதற்காக நடத்தப்படும் "ஜல்லிக்கட்டுக்கு" பொருந்தாது; மற்றும் அவ்வாறு நடத்தப்படும் "ஜல்லிக்கட்டு" இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றமாக கருதப்படமாட்டாது.

நீக்கறவு மற்றும் காப்பு.

**8.** (1) 2017ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) அவசரச் சட்டம் இதன் மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2017.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறு இருப்பினும், மேற்சொன்ன அவசர சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறாக முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் – காரண விளக்கவுரை**

விலங்குகளுக்குத் தேவையற்ற வதை மற்றும் தீங்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காக, 1960ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் (மையச் சட்டம் 59/1960) இயற்றப்பட்டது. இந்தச் சட்டம், குறித்த சில நேர்வுகளில் அதனுடைய பொருந்துகையை விலக்கி விடுவதற்கு ஏற்பளிப்பு அளிக்கிறது. உச்சநீதிமன்றம், இந்திய விலங்குகள் நல வாரியம் – *எதிர்* – ஏ. நாகராஜா (உரிமையியல் மேல்முறையீடு எண். 5387/2014) என்கின்ற வழக்கின் தீர்ப்பில், ஜல்லிக்கட்டை நடத்துவதென்பது, மையச் சட்டம் 59/1960இன் வகைமுறைகளை மீறுவதான செயலாகும் எனவும், குறிப்பாக, இந்தச் சட்டத்தின் 3, 11 மற்றும் 22ஆம் பிரிவுகளுக்கு எதிரானது எனவும் தீர்ப்பளித்துள்ளது. தமிழ்நாடு மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளின் மக்களுக்கு ஜல்லிக்கட்டு என்னும் நிகழ்வானது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கக் கூடியதாகவும், முன்னேற்றக்கூடியதாகவும் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டும், சொந்த மண்ணின் காளைகள் உயிர் வாழ்வதையும், அவை தொடர்ந்து நன்றாக இருப்பதை உறுதி செய்வதற்கும் ஜல்லிக்கட்டு முக்கியப் பங்கினை ஆற்றுகிறது என்பதைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு அரசு மேற்சொன்ன மையச் சட்டம் 59/1960இன் வகைமுறைகளிலிருந்து 'ஜல்லிக்கட்டு' நடத்துவதை விலக்கி விடுவதென முடிவு செய்திருக்கிறது. அதன் காரணமாக, அரசு தமிழ்நாடு மாநிலத்தில் அதனுடைய பொருந்துகையில், மேற்சொன்ன மையச் சட்டம் 59/1960 ஐ திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது. அதன்படி, 2017ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) அவசர சட்டம், 2017ஆம் ஆண்டு, ஜனவரி 21ஆம் நாளன்று, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டு, அது 2017ஆம் ஆண்டு, ஜனவரி 21ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டது.

**2.** இந்த சட்டமுன்வடிவு மேற்சொன்ன அவசர சட்டத்தை மாற்றி அமைக்க விழைகிறது.

**பா. பாலகிருஷ்ணா ரெட்டி**,
*கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பாணை**

இந்தச் சட்ட முன்வடிவின் 2 மற்றும் 3ஆம் கூறுகளினால் புகுத்தப்படக் கருதப்பட்டுள்ள 1960ஆம் ஆண்டு விலங்குகளுக்கு துன்பம் விளைவிப்பதைத் தடை செய்தல் சட்டத்தின் (மையச் சட்டம் 59 (1960) 2ஆம் பிரிவின் (dd) கூறும் 3ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவும் அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள அல்லது ஆணையை வெளியிடுவதற்கு அல்லது விதிகளைச் செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் சாதாரணமானவை அவை தனித்தன்மை கொண்டவை அல்ல.

**2017ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) அவசர சட்டம் (தமிழ்நாடு அவசர சட்டம் எண்.1/2017) பிறப்பிக்கப்பட்டதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகின்ற சட்டமன்றப் பேரவை விதிகளின் 168ஆம் விதியின்படியான விவர அறிக்கை.**

விலங்குகளுக்குத் தேவையற்ற வதை மற்றும் தீங்கு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காக, 1960ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்புச் சட்டம் (மையச் சட்டம் 59/1960) இயற்றப்பட்டது. இந்தச் சட்டம், குறித்த சில நேர்வுகளில் அதனுடைய பொருந்துகையை விலக்கி விடுவதற்கு ஏற்பளிப்பு அளிக்கிறது. உச்சநீதிமன்றம், இந்திய விலங்குகள் நல வாரியம் – *எதிர்* – ஏ. நாகராஜா (உரிமையியல் மேல்முறையீடு எண். 5387/2014) என்கின்ற வழக்கின் தீர்ப்பில், ஜல்லிக்கட்டை நடத்துவதென்பது, மையச் சட்டம் 59/1960இன் வகைமுறைகளை மீறுவதான செயலாகும் எனவும், குறிப்பாக, இந்தச் சட்டத்தின் 3, 11 மற்றும் 22ஆம் பிரிவுகளுக்கு எதிரானது எனவும் தீர்ப்பளித்துள்ளது. தமிழ்நாடு மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளின் மக்களுக்கு ஜல்லிக்கட்டு என்னும் நிகழ்வானது பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கக் கூடியதாகவும், முன்னேற்றக்கூடியதாகவும் இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டும், சொந்த மண்ணின் காளைகள் உயிர் வாழ்வதையும், அவை தொடர்ந்து நன்றாக இருப்பதை உறுதி செய்வதற்கும் ஜல்லிக்கட்டு முக்கியப் பங்கினை ஆற்றுகிறது என்பதைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாடு அரசு மேற்சொன்ன மையச் சட்டம் 59/1960இன் வகைமுறைகளிலிருந்து 'ஜல்லிக்கட்டு' நடத்துவதை விலக்கி விடுவதென முடிவு செய்திருக்கிறது. அதன் காரணமாக, அரசு, தமிழ்நாடு மாநிலத்தில் அதனுடைய பொருந்துகையில், மேற்சொன்ன மையச் சட்டம் 59/1960ஐ திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

2. அச்சமயத்தில், மாநில சட்டமன்றப் பேரவை அமர்வில் இல்லாததால், மேற்சொன்ன முடிவிற்கு, செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, அவசர சட்டம் ஒன்று பிறப்பிப்பது தேவையானதால், அதன்படியே, 2017ஆம் ஆண்டு விலங்குகள் வதைத் தடுப்பு (தமிழ்நாடு திருத்தம்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2017) மாண்புமிகு ஆளுநர் அவர்களால் 2017, ஜனவரி 21ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்டு, அது 2017, ஜனவரி 21ஆம் தேதியிடப்பட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.